பதினாறாவது ஆண்டு அறிக்கை

SIXTEENTH ANNUAL REPORT

1987-88

தமிழ்நாடு திரையரங்குக் கழகம்

TAMIL NADU THEATRE CORPORATION LTD

தமிழ்நாடு திரையரங்குக் கழகம்

(பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

தரமணி, சென்னை-600 113.

30-6-1988 ஆம் நாள் நிலவரப்படி முக்கிய கூறுகள்

ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை		80
ஒப்புதலளிக்கப்பட்ட கடன் தொகை	ரூ.	92.03 இலட்சம்
வழங்கப்பட்ட கடன் தொகை	ரூ.	90.05 இலட்சம்
தொடங்கப்பட்ட திரையரங்குகளின் எண்ணிக்கை		79

மாவட்ட வாரியான விவரங்கள் :

மாவட்டம்	ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள்	தொடங்கப்பட்ட திரையரங்குகள்
அண்ணா	3	3
செங்கற்பட்டு	19	19
சிதம்பரனார்	2	2
கோயம்புத்தூர்	4	4
தருமபுரி	2	2
காமராஜர்	2	2
மதுரை	5	5
வட ஆற்காடு	14	14
பசும்பொன் முத்துராமலிங்கம்	2	2
பெரியார்	2	2
புதுக்கோட்டை	4	4
ராமநாதபுரம்	3	2
தென் ஆற்காடு	3	3
சேலம்	4	4
தஞ்சாவூர்	2	2
திருச்சிராப்பள்ளி	5	5
திருநெல்வேலி	4	4
மொத்தம்	80	79

தமிழ்நாடு திரையரங்குக் கழகம்

பதினாறாம் ஆண்டு அறிக்கை

380/89.

1987-88

(49)

பொருளடக்கம்

		பக்கம்
1.	பொதுத் தகவல்	2
2.	உறுப்பினர்களுக்கு அறிவிப்பு	3
3.	இயக்குனர்களின் அறிக்கை	5
4.	தணிக்கையாளரின் அறிக்கை	9
5.	ஐந்தொகைக் கணக்கு	11
6.	ஆதாய இழப்புக் கணக்கு	13
7.	ஐந்தொகைக் கணக்கின் பகுதியாக அமையும் விவர அட்டவனைகள் மற்றும் குறிப்புகள்	15
8.	இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் துணைக் கருத்துரை	19
9.	முக்கியக் கூறுகள்	21

தமிழ்நாடு திரையரங்குக் கழகம்

தரமணி, சென்னை-600 113.

இயக்குநர்கள் குழு :

பெயர்	பொறுப்பு
திரு. ஏ. பி. முத்துசாமி, இ. ஆ. ப., (24-2-88 வரை) திரு. சி.என். இராம்தாஸ், இ. ஆ. ப., (25-2-88 முதல்)	தலைவர்
திரு. ஆர். கற்பூரசுந்தரபாண்டியன், இ. ஆ. ப., (1-3-88 வரை) திரு. சி. என். கிருஷ்ணபாரதி, இ. ஆ. ப., (17-3-88 முதல்)	நிர்வாக இயக்குநர்
திரு. சுகவனேஷ்வர், இ. ஆ. ப., (2-11-87 வரை) திரு. கே. ஆளுடைய பிள்ளை, இ. ஆ. ப., (3-11-87 முதல்) திரு. ஆர். காத்தபெருமாள், பி. ஏ., (27-6-87 வரை) திரு. எஸ். நடராஜன், பி. ஏ., (8-11-87 வரை) திரு ஆர். நவமணி, பி ஏ., (3-7-88 வரை) திரு. கே. பழனிச்சாமி, பி. ஏ., (12-9-88 வரை) திரு. எஸ். அருள்சாமி, பி. ஏ., (ஆனர்ஸ்) (13-9-88 முதல்) திரு டி. இராமானுஜம் திரு. கே. கிருஷ்ணமூர்த்தி (2-2-88 வரை) திரு. வி. சோமநாதன்	இயக்குநர்கள்

நிறுவனச் செயலாளர் : திரு. சீ. கோபாலகிருஷ்ணன், பி. காம்., எப். சி. எஸ். (5-5-88 வரை)

வங்கியாளர்கள் : இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கதீட்ரல் கிளை & அடையாறு கிளை

தணிக்கையாளர்கள் : திருவாளர்கள் ஆர். இரகுநந்தன் அண்டு கம்பெனி
பட்டயக் கணக்கர்கள்
நெ. 2, வி. கிருஷ்ணசாமி அய்யர் அவின்யூ,
லஸ், மைலாப்பூர். சென்னை-600 004.

சட்ட ஆலோசகர் : திரு. கே. ஆர். நடராஜன், பி. ஏ., பி. எல்.,

பதிவு பெற்ற அலுவலகம் : தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி
நிறுவனக் கட்டிடம், தரமணி, சென்னை-600 113.

தமிழ்நாடு திரையரங்குக் கழகம்

உறுப்பினர்களுக்கு அறிவிப்பு

தமிழ்நாடு திரையரங்குக் கழகம், சென்னை பங்குதாரர்களின் பதினாறாம் ஆண்டுப் பொதுக் கூட்டம் தலைமைச் செயலகத்தின் பழைய கட்டிடத்திலுள்ள கருத் தாய்வுக் கூடத்தில் (இக் கூடம் சென்னையில் உள்ள தலைமைச் செயலகத்தின் பழைய கட்டிடத்தில் இரண்டாம் மாடியில் உள்ளது). பின்வருவன குறித்து ஆய்வு செய்யும் பொருட்டு செப்டம்பர் திங்கள் 28-ம் நாள் புதன்கிழமை 11 மணியளவில் நடைபெறும்.

சாதாரண அலுவல்

1. இயக்குநர்கள் அறிக்கை, 1988 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ஆம் நாளோடு முடிவடைந்த தணிக்கை செய்யப்பட்ட ஆதாய இழப்புக் கணக்கு மற்றும் அந்நாளன்றிருந்தவாறான ஐந்தொகை விவரக் கணக்கு மற்றும் தணிக்கையாளர்கள் அறிக்கை ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளுதல்.

சிறப்பு அலுவல்

2. பின்வரும் தீர்மானம் பொருத்தமானதாக, இருப்பின், மாற்றங்கள் செய்தோ, அல்லது செய்யாமலோ ஏற்று சிறப்புத் தீர்மானமாக நிறைவேற்றுதல்.

இப்பொழுது நடைமுறையிலிருக்கும் உள் விதிமுறை எண். 76 (1)(ஏ)ஐ மாற்றிவிட்டு அதற்கு பதில் கீழ்காணும் உள்விதிமுறையை சேர்த்து விடுதல்.

> 76 இயக்குநர்கள் குழு ஆளுனரின் எழுத்து மூலம் அளிக்கும் ஒப்புதலின்றி கீழ்கண்டவற்றிற்கு தன்னுடைய ஒப்புதலை அளிக்காது :
> (1 (ஏ) ''அதிகபட்சம் சம்பள விகிதம் ரூ. 4050ஐ தாண்டும் பொருட்டு எந்த ஒரு பதவியையும்தோற்றுவித்தல் அல்லது, அப்பதவிற்கு எவரையும் நியமனம் செய்வது''

(குழுவின் ஆணைப்படி)

தமிழ்நாடு திரையரங்குக் கழகத்திற்காக
சி. என். கிருஷ்ணபாரதி
நிர்வாக இயக்குநர்

பதிவு பெற்ற அலுவலகம் :
தமிழ்நாடு திரைப்படம் மற்றும்
தொலைக்காட்சி நிறுவனக் கட்டிடம்,
தரமணி, சென்னை—600 113.
நாள் : 14-9-1988.

குறிப்பு : 1. கூட்டத்திற்கு வந்து வாக்களிக்க உரிமையுடைய ஓர் உறுப்பினர் தனக்குப் பதிலாக வந்து வாக்களிக்க பதிலாள் ஒருவரை நியமிக்க உரிமை உடையவராவார். அப்பதிலாள் உறுப்பினராகத்தான் இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை.

2. 1956 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டப்பிரிவு 173 (2)ன் படி சிறப்பு அலுவலுக்கான விரிவான அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திரையரங்குக் கழகம்

அறிவிப்புச் சேர்க்கை

1956 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம் பிரிவு 173 (2)ன் படி விரிவான அறிக்கை

எண். 2 சிறப்பு அலுவல் :

இப்பொழுது நடைமுறையிலிருக்கும் உள்விதிமுறை எண். 76(1) (ஏ)ன் படி அதிகபட்ச சம்பள விகிதம் 4050 அல்லது அதற்கு மேலும் என்ற வகையில் எந்த ஒரு பதவியையும் தோற்றுவித்தல் அல்லது அதிகபட்ச சம்பள விகிதம் ரூ. 3090 அல்லது அதற்கு மேலும் என்ற வகையில் எந்த ஒரு பதவிக்கும் எவரையும் நியமனம் செய்வது சம்மந்தமாக இயக்குநர்கள் குழு எந்த ஒரு முடிவையும் ஆளுனரின் எழுத்துமூலம் அளிக்கும் ஒப்புதலின்றி எடுக்க முடியாது. இப்பொழுது அரசு பிறப்பித்திருக்கும் ஆணை எண். 340, நிதித்துறை (பொதுத் துறை நிறுவனங்கள் குழுமம்) நாள் 12-5-88ன் படி அதிகபட்ச சம்பள விகிதம் ரூ. 4050 வரைக்கும் எந்த ஒரு பதவியையும் தோற்றுவிக்கவும் அல்லது அப்பதவிக்கு எவரையும் நியமனம் செய்யவும் பொதுத் துறை நிறுவனங்களுக்கும் வாரியங்களுக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. மேற்கூறிய அதிகபட்ச சம்பள விகிதம் ரூ. 4050ஐ தாண்டும் பொருட்டு எந்த ஒரு பதவியையும் தோற்றுவித்தல் அல்லது அப்பதவிக்கு எவரையும் நியமனம் செய்வது போன்றவற்றை இயக்குநர்கள் குழு ஆளுனரின் எழுத்து மூலம் அளிக்கும் ஒப்புதலுக்குப் பிறகே தன்னுடைய ஒப்புதலை அளிக்கும். மேற்கூறிய திருத்தங்களை உள்விவகார விதிமுறைகளில் தக்கவாறு உட்புகுத்த விதிமுறை எண். 76 (1) (ஏ)ஐ திருத்தம் செய்யும் பொருட்டு சிறப்புத் தீர்மானம் எண். 2 முன் மொழியப்பட்டுள்ளது இயக்குநர்கள் எவரும் நேரடியாக இத் தீர்மானத்தால் சம்பந்தப்படவில்லை.

தமிழ்நாடு திரையரங்குக் கழகம்

இயக்குநர்கள் அறிக்கை

பெறுநர் :

பங்குதாரர்கள்

பெருந்தகையீர்,

31-3-88 ஆம் நாளோடு முடிவடைந்த பதினாறாம் ஆண்டு அறிக்கை மற்றும் தணிக்கை செய்யப்பட்டக் கணக்குகளைத் தாக்கல் செய்வதில் இக்கழகத்தின் இயக்குநர்கள் குழு பெருமகிழ்வெய்துகிறது.

மூலதன அமைப்பு :

இக்கழகத்தின் அறிவிக்கப்பட்டு தொகை செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் 35 இலட்சம் ரூபாயாகவே தொடர்ந்து இருந்து வருகிறது. இவை ஒவ்வொன்றும் 100 ரூபாய் மதிப்புடைய 35,000 நிலையான வட்டியில்லா பங்குகளாகப் பிரிக்கப்பட்டு அப்பங்குகளுக்குத் தமிழ்நாடு ஆளுநர் அவர்களாலும் அவருடைய நியமனதாரர் களாலும் முழுவதும் தொகை செலுத்தப்பட்டுள்ளது.

நிதி நிலை :

1986-87 ரூபாய்		1987-88 ரூபாய்
27,899	தேய்மானத்திற்குரிய தொகையை ஒதுக்குவதற்கு முன் இருந்த நிகரலாபம்	...
...	தேய்மானத்திற்குரிய தொகையை ஒதுக்குவதற்கு முன் இருந்த நஷ்டம்	1,10,002
1,531	தேய்மானம்	1,345
26,368	(+) ஆண்டில் ஏற்பட்ட நிகர இலாபம் / நஷ்டம் (—)	1,11,347

செயல் :

தனியாருக்கு பகுதி நிலைத் திரையரங்கு கட்டுவதற்கு தொடர்ந்து நிதி உதவி அளிப்பது பற்றிய அரசின் கொள்கை முடிவு வரவேண்டியிருந்ததால் நடப்பாண்டிலும் திரையரங்குக் கழகம் பகுதிநிலைத் திரையரங்குகள் கட்டுவதற்கு மேலும் எவ்வித நிதி உதவியும் வழங்கவில்லை. இக்கழகம் கடனாளிகளிடமிருந்து நிலுவைத் தொகை யினை வசூலிப்பதில் தீவிர கவனம் செலுத்தி அதில் ஓரளவு வெற்றியும் அடைந் துள்ளது. சென்ற ஆண்டு ரூ. 5.58 இலட்சம் வசூல் செய்ததற்கு மாறாக இவ்வாண்டு ரூ. 4.23 இலட்சம் மட்டுமே வசூல் செய்யப்பட்டது. ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் மொத்த எண்ணிக்கை 80-ல் 78 பகுதி நிலைத் திரையரங்குகள் 17 மாவட்டங்களில் கட்டி முடிக்கப்பட்டு திரைப்படக் காட்சிகள் தொடங்கப்பட்டுள்ளன. மீதியுள்ள இரண்டு கட்டி முடிக்கப்படாத திரையரங்குகளின் மேல் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டு கழகத்திற்குச் சாதகமாக இறுதி நிலைத் தீர்ப்பு பெறப்பட்டுள்ளன.

ஏற்காடு திரையரங்கம் :

உங்கள் இயக்குநர்கள் முடிவெடுத்தபடி ஏற்காடு திரையரங்கிற்காகச் செலவிடப்பட்ட ரூ. 2.80 இலட்சத்தில் ரூபாய் ஒரு இலட்சத்தை ஒட்டு மொத்தமாகச் செலுத்துவதுடன் எஞ்சியுள்ள தொகையை ஆண்டுக்கு 17% வட்டி வீதம் 60 சமமான மாதத் தவணைகளில் வசூல் செய்யும் பொருட்டு கடனாக மாற்றப்பட்டது. மேற்கூறிய ஏற்பாட்டிற்கு தமிழக அரசு ஆணை எண். 390, நாள் 4-11-85, செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின்படி ஒப்புதலளித்தவுடன் நிலுவைத் தொகையான ரூ. 1.80 இலட்சத்தை 7-3 85 முதல் 60 மாதத் தவணைகளில் கட்டும்படி உத்தரவு பிறப்பித்த பிறகு ஏற்காடு நகரியம் தான் பெற்ற மொத்த கடன் தொகை ரூ. 2 80 இலட்சத்திற்கு ரூ. 3.58 இலட்சம் (ரூ. 2.20 இலட்சம் அசலுக்கும், ரூ. 1.38 இலட்சம் வட்டிக்கும்) கட்டியுள்ளது.

தமிழக அரசின் கடன் :

1978-79 மற்றும் 1979-80 ஆம் வருடத்தில் தமிழக அரசு இக்கழகத்திற்கு வழங்கிய இரண்டு நீண்ட கால மொத்த கடன் தொகையான ரூ. 15 இலட்சத்தில், இதுநாள்வரை ரூ. 20.02 இலட்சம் (ரூ. 11.50 இலட்சம் அசல் கணக்கிலும் மற்றும் ரூ. 8.52 இலட்சம் வட்டி மற்றும் தண்ட வட்டி கணக்கிலுமாக) அரசுக்குத் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது.

வசூல்கள் :

இன்றைய தேதிப்படி கடன் வழங்கப்பட்ட 80 கடனாளிகளில் 41 கடனாளிகள் (சிவில் வழக்கு தொடரப்பட்ட 4 வழக்கு உள்பட) கடன் தொகையை முழுவதுமாகச் செலுத்தி கணக்கை முடித்துக் கொண்டனர். மீதமுள்ள 39 கடனாளிகளில், 29 கடனாளிகள் மீது சிவில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மீதமுள்ள 10 கடனாளிகளை அந்தந்த மாவட்ட அரசு வழக்கறிஞர்கள் மூலமாக வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பப்பட்டு தங்கள் கடன் கணக்கை பைசல் செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

அரசு வழக்கறிஞர்கள் மூலமாக நீதிமன்றங்களில் தொடரப்பட்டுள்ள 31 வழக்குகளில், 4 வழக்குகள் முழுவதுமாக கணக்கு சரி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள மேற்படி சிவில் வழக்குகளில 17 வழக்குகள் இந்நிறுவனத்திற்குச் சாதகமாக தீர்ப்பாகியுள்ளது. மற்ற வழக்குகள் வெவ்வேறு நிலையிலுள்ளன.

31-3-88 ஆம் ஆண்டு இறுதியில் நிலுவையாயுள்ள கடன் தொகை பற்றிய நிலவரத்தைக் காட்டும் விவர அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

விவரம்	1986-87			1987-88		
	அசல்	வட்டி	மொத்தம்	அசல்	வட்டி	மொத்தம்
			(ரூபாய் இலட்சத்தில்)			
ஆண்டுத் தொடக்கத்தில் நிலுவையாய் இருந்த தொகை	35.27	58.04	93.31	33.35	62.74	96.09
கூட்டவும் :						
1. கோரிய கேட்புத் தொகை	0.70	7.66	8.36	0.66	8.09	8.75
2. முந்தைய ஆண்டிற்கான சரி செய்யப்பட வேண்டியவை	...	...	...	...	7.97	7.97
	35.97	65.70	101.67	34.01	78.80	112.81
கழிக்கவும் : வசூலிக்கப்பட்ட தொகை	2.62	2.96	5.58	1.57	2.66	4.23
ஆண்டு இறுதியில் நிலுவையாக இருந்த தொகை	33.35	62.74	96.09	32.44	76.14	108.58

15-6-88 ஆம் நாளன்றிருந்தவாறு கேட்புத் தொகை வசூல் தொகை, நிலுவையாய் உள்ள இருப்பு ஆகியவை தொடர்பான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

விவரம்	அசல்	வட்டி	மொத்தம்
	(ரூபாய் இலட்சத்தில்)		
மொத்த கேட்புத் தொகை	89.84	126.57	216.41
வசூலான தொகை	57.46	54.04	111.50
	32.38	72.53	104.91
சிவில் வழக்குச் செலவினங்கள் முதலியன செலுத்த வேண்டியவை	...	...	5.25
15-6-88 ஆம் நாளன்றிருந்த நிலுவையிலுள்ள இருப்புத் தொகை			110.16

ஏற்று நடத்த உள்ள கழகத்தின் மாற்று நடவடிக்கைகள் :

24-6-88 அன்று நடைபெற்ற கூட்டத்தில் உங்கள் இயக்குநர் குழுவினரால் ஒப்புதலளிக்கப்பட்ட பின்வரும் மாற்று நடவடிக்கைகளை ஏற்று நடத்தும் பொருட்டு ரூ. 50.00 இலட்சத்தை குறைந்த வட்டியில் கடனாக வழங்கும்படி அரசை கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

i) தமிழ்நாட்டிலுள்ள நகர்ப்புற மற்றும் புறநகர் பகுதிகளில் நிரந்தர திரையரங்குகளை கட்டுவதற்கு பம்பாயில் இருக்கும் தேசிய சினிமா வளர்ச்சிக் கழகத்துடன் சேர்ந்து கொண்டு நிதியுதவி செய்வது.

ii) சென்னைப் பெருநகர்ப் புரத்தில் ஏற்கனவே கட்டப்பட்டு இயங்கிவரும் அல்லது கட்ட இருக்கிற நிரந்தர திரையரங்குகளுக்கு திரைப்பட ஒளி வீழ்த்திகள், ஜெனரேட்டர்கள் மற்றும் குளிரூட்டும் சாதனங்கள் போன்றவை வாங்க நிதியுதவி அளித்தல்.

iii) நகரியம், ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகராட்சிகளுக்கு பகுதி நிலை மற்றும் நிரந்தர திரையரங்கு கட்ட கடனுதவி வழங்குதல்.

மேற்குறித்த மாற்று நடவடிக்கைகளை ஏற்று நடத்த அரசின் ஒப்புதல் எதிர்ப் பார்க்கப்படுகிறது

கடனாளிகளுக்கு உதவி :

கழகம் கடனாளிகளுக்குத் தயார் நிலையிலான பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர் ஏற்பளித்துள்ள தரமான மாதிரி வடிவமைப்புகளை கிராமப் பகுதிகளில் பகுதி நிலைத் திரையரங்குகளைக் கட்டுவதற்கு மிகவும் பொருத்தமானவாறு திரைப்படம் காட்டும் ஒரு கருவியின் விலை உள்பட சுமார் ரூ. 3.65 இலட்சம் செலவில் கட்டக்கூடிய வகையில் வழங்கி வருகிறது. மேலும் உருக்குக் கட்டிகள் (அழுத்தப்பட்டவை) ஏ. சி. தகடுகள் முதலியவை போன்ற கட்டிடப் பொருட்களை வாங்கவும் அவர்களுக்கு உதவி வருகிறது. திரைப்படம் காட்டும் கருவி மற்றும் ஒலி சாதனங்களும் அனுமதிக்கப்பட்ட விலைகளில் அவற்றின் தயாரிப்பாளர்களிடமிருந்து கடனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

பணியாளர்களின் விவரங்கள் :

1956 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் 217(2ஏ) பிரிவின்படி பணியாளர்கள் விவரங்களடங்கிய தகவல் கீழே தரப்பட்டுள்ளன. கீழே கூறப்பட்டுள்ள பணியாளர் இக்கழக இயக்குநர்களுக்குச் சொந்தம் இல்லை.

1. நிதியாண்டு முழுவதும் பணியாற்றி அவ்வாண்டில் ரூ. 36,000 க்கு குறையாமல் ஊதியம் பெற்றவர்.

பெயர் மற்றும் பதவி	சம்பளம் (வருங்கால வைப்பு நிதி ஊழியர் நல்வாழ்வுச் செலவினம் உள்பட)	அலுவலின் தன்மை	தகுதி	வயது
(1)	(2)	(3)	(4)	(5)
திரு சீ. கோபால கிருஷ்ணன், நிறுவனச் செயலாளர்	ரூ. 53,962	நிதி, கணக்கு மற்றும் செயலகச் சம்பந்தப்பட்ட பொறுப்பு	பி.காம் எப்.சி.எஸ்.	47

முன் அனுபவம் (முந்தைய நிறுவன அனுபவம் உட்பட)	பணி தொடக்க நாள்	முந்தைய பதவி பற்றியது
(6)	(7)	(8)
27 வருடம்	14-11-1979	உதவி மேலாளர், தமிழ்நாடு பால்வள நிறுவனம், சென்னை-600 010.

2. நிதியாண்டு ஒரு பகுதியில் பணியாற்றி மொத்தம் திங்கள் ஒன்றுக்கு 3,000 ரூபாய்க்கு குறையாத விகிதத்தில் அவ்வாண்டில் யாதொரு பகுதியிலும் ஊதியம் பெற்றவர். —இல்லை—

தணிக்கையாளர்கள் :

பட்டயக் கணக்கர் திருவாளர்கள் ஆர். இரகுநந்தன் அண்டு கம்பெனியை 1987-88 ஆண்டிற்கு இக்கழகத்தின் தணிக்கையாளராக இந்திய அரசு நியமனம் செய்துள்ளது.

இயக்குநர்கள் :

இக்கழகத்தின் அறிக்கையாண்டில் கீழ்கண்ட அதிகாரிகள் தலைவர் நிர்வாக இயயக்குநர் மற்றும் இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

1. திரு.சி.என். இராமதாஸ், இ.ஆ.ப. அவர்கள், திரு.ஏ.பி. முத்துசாமி, இ.ஆ ப. அவர்களுக்கு பதிலாக தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

2. நிர்வாக இயக்குநராக திரு. சி. என். கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப. அவர்கள், திரு ஆர். கற்பூரசுந்தர பாண்டியன், இ ஆ.ப., அவர்களுக்கு பதிலாக நியமிக்கப்பட்டுள்ளார்.

3. திரு. சுகவனேஸ்வர், இ.ஆ.ப. அவர்களுக்கு பதிலாக திரு. கே. ஆளுடைய பிள்ளை, இ.ஆ ப. அவர்கள் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

4. திரு. ஆர். காத்த பெருமாள் அவர்களுக்குப் பதிலாக திரு. எஸ். நடராஜன் அவர்களும், திரு. எஸ். நடராஜன் அவர்களுக்குப் பதிலாக திரு. ஆர். நவமணி அவர்களும், திரு. ஆர். நவமணி அவர்களுக்குப் பதிலாக திரு.கே.பழனிசாமி பி.ஏ. அவர்களும் மற்றும் திரு.கே. பழனிசாமி, பி.ஏ. அவர்களுக்குப் பதிலாக திரு. எஸ். அருள்சாமி, பி.ஏ. (ஆனர்ஸ்) அவர்களும் இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

5. திரு. கே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 2-2-88 முதல் இயக்குநர் பொறுப்பிலிருந்து ராஜினாமா செய்துள்ளார்.

6. திரு எஸ். கோபாலகிருஷ்ணன் அவர்கள் 5-5-88 பிற்பகல் முதல் நிறுவனச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

நன்றியுரை :

இக்கழகத்தில் பல்வேறு நடவடிக்கைகளில் பங்கேற்றுப் பணியாற்றிய அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் செயல்பாடு பாராட்டத் தக்கது என உங்கள் இயக்குநர்கள் மகிழ்வெய்தி தங்களுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். இயக்குநர்கள் இச் சந்தர்ப்பத்தில் தமிழ்நாடு அரசு, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி திரைப்படக் கருவி வழங்குபவர்கள் மற்றும் தங்கள் ஒத்துழைப்பைக் கொடுத்த ஏனையோருக்கும் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

இயக்குநர்கள் குழுவிற்காகவும்,
அவர்கள் சார்பாகவும்
சி. என். இராம்தாஸ்
தலைவர்

சென்னை-600 113
நாள் : 14-9-1988

தமிழ்நாடு திரையரங்குக் கழகம்

தணிக்கையாளர்களின் அறிக்கை

பெறுநர் :

பங்குதாரர்கள்,
தமிழ்நாடு திரையரங்குக் கழகம்.
சென்னை-600 113.

31-3-1988-ஆம் நாளன்றிருந்தவாறு தமிழ்நாடு திரையரங்குக் கழகத்தின் இணைக்கப்பட்டுள்ள ஐந்தொகை விவரக் கணக்கையும், அந்நாளுடன் முடிவடையும் ஆண்டிற்குரிய ஆதாய இழப்புக் கணக்கையும் தணிக்கை செய்து பின்வருமாறு தெரிவிக்கிறோம்.

1. 1956-ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் 227 (4ஏ) பிரிவின் நிபந்தனை களின் கீழ் கம்பெனிக்குச் சட்டக்குழு வெளியிட்டுள்ள 1975-ஆம் ஆண்டு தயாரிப்பு மற்றும் ஏனைய் கம்பெனிகள் (தணிக்கையாயர் அறிக்கை) ஆணையில் சொல்லி யுள்ளவாறு இக்கழகத்திற்கும் பொருந்துகின்ற வகையிலும் தொடர்புடைய வகை யிலும் மேற்சொன்ன ஆணையின் 4 மற்றும் 5-ஆம் பத்திகளில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் குறித்த விவர அறிக்கையை இணைப்பில் கொடுத்துள்ளோம்.

2. மேலே 1-ஆம் பத்தியில் குறிப்பிட்டுள்ள இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களோடு பின்வருவனவற்றையும் தெரிவிக்கிறோம்.

அ) எங்களுக்கு தெரிந்த அளவிற்கு அவசியமாய் இருந்த தகவல்கள் விளக்கங் கள் ஆகியவை அனைத்தையும் நாங்கள் பெற்றுள்ளோம்.

ஆ) சட்டத்தில் சொல்லியுள்ளவாறு இக்கழகம் கணக்குகள் தொடர்பாக பேரேடுகளை வைத்து வந்துள்ளது. அப்பேரேடுகள் நாங்கள் தணிக்கை செய்ய இயலும் வகையில் இருந்தன எனக் கருதுகிறோம்.

இ) இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஐந்தொகை விவரக் கணக்கு ஆதாய இழப்புக் கணக்கு ஆகியவை கணக்குப் புத்தகங்களுடன் ஒத்துள்ளன.

ஈ) எங்கள் கருத்துப்படியும், நாங்கள் ஆய்வு செய்ததிலிருந்து எங்களுக்கு அளித்த விளக்கத்தின்படியும், மேற்சொன்ன ஐந்தொகை விவரக்கணக்கு, ஆதாய இழப்புக் கணக்கு அதன் குறிப்புகள், 1956-ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தில் சொல்லியுள்ள முறையில் தகவல்கள் :-

1) 31-3-1988-ஆம் நாளன்றிருந்தவாறு கம்பெனியின் நடவடிக்கைகள் குறித்து ஐந்தொகை விவரக் கணக்கு தொடர்பான வரையிலும்,

2) அந்நாளுடன் முடிவடைகின்ற ஆண்டிற்கு கம்பெனியின் இழப்பு தொடர்பான ஆதாய இழப்புக் கணக்கிற்குத் தொடர்பான வரை யிலும் உண்மையானவையே என்று நாங்கள் கருதுகிறோம்.

ஆர். இரகுநந்தன் அண்டு கோவிற்காக
பட்டயக் கணக்கர்கள்.

இடம் : சென்னை-4
நாள் : 19-9-1988

ஆர். இரகுநந்தன்
பட்டயக் கணக்கர்கள்

இணைப்பு

எமது அறிக்கையின் முதல் பத்தியில் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு திரையரங்குக் கழகம் பற்றியது :

1. இந்நிறுவனம் தனது நிலையான ஆஸ்தி இருப்புக்களின் அளவு, அவற்றின் அமைவிடம் ஆகியவை உட்பட முழு விவரங்களைக் காட்டும் சரியான பதிவேடுகளை வைத்துள்ளது. நிலையான ஆஸதி இருப்புகளை நிர்வாகத்தினர் நேரடியாகச் சரிபார்த்தனர். அவ்வாறு சரிபார்த்ததில் கணக்கில் முரண்பாடு எதுவும் காணப்பட வில்லை.

2. நிலையான ஆஸ்தி இருப்புகள் எவையும் இவ்வாண்டில் மறு மதிப்பீடு செய்யப்படவில்லை.

3. 1956-ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் 301-ஆம் பிரிவின் கீழ் வைத்து வரப்படும் பதிவேட்டில் பட்டியலிடப்பட்டுள்ள கம்பெனிகள் நிறுவனங்கள் அல்லது ஏனையோரிடமிருந்து எதனையும் நிறுவனம் ஏற்றுக்கொள்ளவில்லை.

4. அ) கடன் என்ற முறையில் பல்வேறு தரப்பினருக்குக் கொடுக்கப்பட்ட கடன்கள், முன்பணங்கள் ஆகியவற்றைப் பொருத்தவரை, நிர்ண யித்தபடி அசல், வட்டித் தவணைகள் செலுத்தப்படவில்லை. எனினும் அசல், வட்டி தொகைளைத் திருப்பி வசூலிக்க நியாயமான நடவடிக் கைகளை நிறுவனம் எடுத்து வருகிறது.

ஆ) பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட முன் பணங்களைப் பொறுத்தவரை நிர்ணயிக்கப்பட்டவாறு அசல், வட்டித் தொகைகள் வசூலிக்கப்படு கின்றன.

5. பொது மக்களிடமிருந்து குறித்தகால வைப்பீடுகள் எவற்றையும் நிறுவனம் ஏற்றுக்கொள்ளவில்லை.

6. இந்நிறுவனமே உள் தணிக்கை அமைப்பு மூலம் அதன் கணக்குகளைத் தணிக்கை செய்கிறது. இந்நிறுவன வணிகத்தின் அளவு, தன்மைக்கு ஏற்ப உள் தணிக்கை அமைப்பு உள்ளது என்று கருதுகிறோம்.

7. இந்நிறுவனத்தின் பேரேடுகளின்படி உரிய வருங்கால வைப்புநிதிகளை தகுந்த அதிகாரிகளிடம் இந்நிறுவனம் குறித்த காலத்தில் செலுத்திவருகிறது.

ஆர். இரகுநந்தன் அண்டு கோவிற்காக
பட்டயக் கணக்காளர்கள்

இடம் : சென்னை-4
நாள் : 19-9-1988

ஆர். இரகுநந்தன்
பட்டயக் கணக்கர்

தமிழ்நாடு திரையரங்குக்

31-3-1988 ஆம் நாளுக்கான

முந்தைய ஆண்டு	பொறுப்புகள்		நடப்பாண்டு
ரூ.			ரூ.
	பங்கு மூலதனம்		
	ஒப்புதல் பெற்றது		
50,00,000	ஒவ்வொன்றும் ரூ. 100 வீதம் 50,000 சம பங்குகள்		50,00,000
	வெளியிடப்பட்டவை, சந்தா செலுத்தப்பட்டவை மற்றும் தொகை செலுத்தப்பட்டவை		
35,00,000	ஒவ்வொன்றும் ரூ. 100 வீதம் 35,000 சம பங்குகள்		35,00,000
	பிணையில்லா கடன்கள் ஏனைய கடன்கள் மற்றும் முன் பணங்கள்		
3,50,000	தமிழக அரசிடமிருந்து பெற்ற நீண்ட காலக் கடன்கள்	3,50,000	
18,629	கணக்கில் சேர்ந்துள்ள தற்போது செலுத்த வேண்டிய வட்டி	58,067	4,08,067
	நடப்பு பொறுப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள்		
	அ) நடப்பு பொறுப்புகள்		
43,526	1) சில்லரை கடன் கொடுத்தவர்கள்	50,423	
696	2) ஏனைய பொறுப்புகள்	395	
1,567	3) குறித்த காலக் கடன்களுக்கு கணக்கில் சேர்த்துள்ள ஆனால் தற்போது செலுத்த வேண்டியிராத வட்டி	1,567	52,385
39,14,418			39,60,452

சென்னை-600 113
நாள் : 14-9-88

சி. என். கிருஷ்ணபாரதி
நிர்வாக இயக்குநர்

கழகம், சென்னை-113
ஐந்தொகைக் குறிப்பு

முந்தைய ஆண்டு	இருப்புகள்		நடப்பாண்டு
ரூ.			ரூ.
	நிலையான இருப்புகள்		
11,599	விவர அட்டவணை 'அ'ன்படி		10,254
	நடப்புச் சொத்துக்கள், கடன்கள் மற்றும் முன் பணங்கள்		
	அ. நடப்பு இருப்புகள்		
1,17,361	விவர அட்டவணை 'ஆ'ன்படி	1,94,734	
	ஆ கடன்களும் முன் பணங்களும்		
36,17,792	விவர அட்டவணை 'இ'ன்படி	34,75,936	
			36,70,670
1,67,666	ஆதாய இழப்பு கணக்கின்படி நஷ்டம்		2,79,528
39,14,418			39,60,452

'ஈ' அட்டவணையுடன் சேர்த்து ஷை தேதியிட்ட எமது அறிக்கையுடன் படிக்கவும்.

சி. என். இராம்தாஸ்
தலைவர்

எஸ். அருள்சாமி
வி. சோமநாதன்
இயக்குநர்கள்

ஆர். இரகுநந்தன் அண்டு கோவிற்காக
பட்டயக் கணக்கர்கள்
ஆர். இரகுநந்தன்
பட்டயக் கணக்கர்

தமிழ்நாடு திரையரங்குக்

31-3-1988 ஆம் தேதியுடன் முடிவடையும்

முந்தைய ஆண்டு		நடப் பாண்டு
ரூ.		ரூ.
1,78,919	சம்பளம் மற்றும் படிகள்	1,98,390
12,141	வருங்கால வைப்பு நிதிக்கும், தொழிலாளர் வைப்பீடு காப்புறுதித் திட்டத்திற்குத் தொகை கொடுத்தல்	13,660
7,702	மருத்துவ ஈடு செய்தலுக்கானச் செலவுகள்	5,102
1,200	இயக்குநர்கள் கூட்டத்திற்கு பங்கேற்புத் தொடர்பாக அவர்களுக்கு வழங்கப்படும் தொகை	1,000
6,000	கட்டிட வாடகை	6,000
1,364	மின் கட்டணச் செலவுகள்	1,331
11,621	பயண வாகனச் செலவினம்	8,301
2,331	அஞ்சல் மற்றும் தொலைபேசிக் கட்டணங்கள்	2,546
10,787	அச்சு மற்றும் எழுது பொருட்கள்	8,518
49,128	தமிழ்நாடு அரசு கடன் குறித்த வட்டி	39,438
240	நிறுவன நமூனாக்கள் பதிவுக் கட்டணங்கள்	300
479	புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகள்	509
4,968	பலவகை செலவுகள்	4,790
1,500	தணிக்கைக் கட்டணங்கள்	1,500
6,528	சட்டச் செலவினங்கள்	92,403
...	விளம்பரச் செலவினங்கள்	2,000
...	பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல்	2,475
1,531	தேய்மானம்	1,345
26,368	நிகர இலாபம் கீழே கொண்டு வரப்பட்டது	...
3,22,807		3,89,608
1,62,591	ஆதாய இழப்புக் கணக்கிலிருந்து கொண்டு வரப்பட்டவை	1,67,666
6,645	முந்தைய ஆண்டுச் செலவினம்	1,365
25,000	முந்தைய ஆண்டுகளுக்கான வருமான வரி	...
...	ஆதாய இழப்புக் கணக்கில்ருந்து கொண்டு வரப்பட்டவை — நட்டம்	1,11,347
1,94,236		2,80,378

சென்னை-600 113
நாள் : 14-9-1988

சி. என். கிருஷ்ணபாரதி
நிர்வாக இயக்குநர்

கழகம், சென்னை-113

ஆண்டுக்கான ஆதாய இழப்புக் கணக்கு

முந்தைய ஆண்டு		நடப் பாண்டு
ரூ.		ரூ.
2,96,793	வழங்கப்பட்ட கடன்களுக்கு வட்டி	2,65,965
6790	வரப்பெற்ற வட்டி ஏனையவை (தொடக்க நிலையில் பிடிக்கப்பட்ட வரி ஏதும் இல்லை)	4,959
189	தரகுத் தொகை மற்றும் தள்ளுபடித் தொகை	135
19,035	சட்டசெலவினங்கள் வசூலிக்கப்பட்டவை	7,051
...	பலவகை வரவினங்கள்	151
...	நட்டம் கீழே கொண்டு வரப்பட்டது	1,11,347
3,22,807		3,89,608
26,368	ஆதாய இழப்புக் கணக்கிலிருந்து கொண்டு வரப்பட்டவை — இலாபம்	...
202	ஐயத்திற்கிடமானவை — வசூலிக்கப்பட்டவை	850
1,67,666	ஐந்தொகைக் கணக்கிற்கு கொண்டு செல்லப்பட்டவை	2,79,528
1,94,236		2,80,378

'ஈ' அட்டவணையுடன் சேர்த்து டி
தேதியிட்ட எமது அறிக்கையுடன்
படிக்கவும்.

சி. என். இராம்தாஸ்
தலைவர்

எஸ். அருள்சாமி
வி. சோமநாதன்
இயக்குநர்கள்

ஆர். இரகுநந்தன் அண்டு கோவிற்காக
பட்டயக் கணக்கர்கள்
ஆர். இரகுநந்தன்
பட்டயக் கணக்கர்

தமிழ்நாடு திரையரங்குக்

1988ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ம் நாள் நிலவரப்படி

அட்டவணை 'அ'

		அடக்க மதிப்பு		
தொடர்பு எண்.	சொத்தின் பெயர்	1987-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ம் நாள் நிலவரப்படி	நடப்பு ஆண்டில் சேர்க்கை	1988-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31ம் நாள் வரையில் மொத்தம்
1.	மேசை நாற்காலிகளும் பொருத்திகளும்	28,773	...	28,773
2.	அலுவலகச் சாதனங்கள்	22,189	...	22,189
3	துவிச்சக்கர வண்டி	556	...	556
		51,518	...	51,518
	முந்தைய ஆண்டிற்கான புள்ளி விவரங்கள்	51,518	...	51,518

விவர அட்டவணை 'ஆ' நடப்புச் சொத்துக்கள்

முந்தைய ஆண்டு	விவரங்கள்		நடப்பாண்டு
ரூ.			ரூ.
	அ) நடப்பு சொத்துக்கள்		
	1. சில்லரை கடன் பெற்றவர்கள், பிணையமில்லாதவை		
	அ) ஆறு திங்கள் கால அளவிற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்கள்		
3,773	வசூலாகும் என்று கருதப்படுபவை		
	ஐயத்திற்கிடமானவை	1,804	
621	ஆ) மற்ற கடன்கள்		
	வசூலாகும் என்று கருதப்படுபவை	...	
		1,804	
	கழிக்கவும்: ஐயத்திற்கிடமானவை வகை செய்யப்பட்டது	1,804	
			...
	2. ரொக்கமும், வங்கி இருப்பும்		
3,561	அ. கையிலுள்ள ரொக்கம்	3,633	
	ஆ. அட்டவணையிடப்பட்ட வங்கியிலுள்ள ரொக்கம்		
19,306	(i) நடப்பு கணக்குகள்	21,001	
30,000	(ii) குறுகியகால வைப்பீட்டுத் தொகை	1,10,000	
100	இ. கூட்டுறவு வங்கியில் நடப்புக் கணக்கில்	100	
			1,34,734
60,000	3. நீதிமன்றத்தில் கடனாளிகள் செலுத்தியுள்ள வைப்பீட்டுத் தொகை		60,000
1,17,361			1,94,734

சென்னை-600 113.
நாள்: 14-9-1988

சி. என். கிருஷ்ணபாரதி
நிர்வாக இயக்குநர்

கழகம், சென்னை-113.

உள்ள ஐந்தொகைக் குறிப்பின் அட்டவணைகள்

தேய்மானம்			நிகர மதிப்பு	
1987-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் வரையில்	நடப்பு ஆண்டின் சேர்க்கை	1988-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் நிலவரப்படி	1988-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் நிலவரப்படி	1987-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் நிலவரப்படி
20,806	797	21,603	7,170	7,967
18,617	536	19,153	3,036	3,572
496	12	508	48	60
39,919	1,345	41,264	10,254	11,599
38,388	1,531	39,919	11,599	13,130

விவர அட்டவணை 'இ' **கடன்கள் மற்றும் முன்பணங்கள்**

முந்தைய ஆண்டு	விவரங்கள்	நடப்பாண்டு
ரூ.		ரூ.
	அ. கடன்கள் மற்றும் முன் பணங்கள்	
	1. பகுதிநிலைத் திரையரங்குகள் கட்டுவது தொடர்பான கடன்களும் 31-3-77-ஆம் ஆண்டு வரையில் அது குறித்த வட்டியும் பிணையத்துடன் கூடியது	
	அ) ஆறு திங்கள் கால அளவிற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்கள்	
36,12,103	வசூலாகும் என்று கருதப்படுபவை	34,69,242
	2. ரொக்கமாக அல்லது பொருளாக வசூலிக்கத் தக்க முன் பணங்கள் பெறவேண்டிய மதிப்பு	
5,513	அ) பணியாளர்களுக்காக முன் பணங்கள்	6,018
	ஆ) பயணத்திற்கான முன் பணங்கள்	400
176	இ) முன்கூட்டியே தொகை செலுத்தப்பட்ட செலவுகள்	276
36,17,792		34,75,936

'ஈ' அட்டவணையுடன் சேர்த்து டி தேதியிட்ட எமது அறிக்கையுடன் படிக்கவும்.

சி. என். இராம்தாஸ்
தலைவர்

எஸ். அருள்சாமி
வி. சோமநாதன்
இயக்குநர்கள்

ஆர். இரகுநந்தன் அண்டு கோவிற்காக
பட்டயக்கணக்கர்கள்
ஆர். இரகுநந்தன்
பட்டயக்கணக்கர்

தமிழ்நாடு திரையரங்குக் கழகம்

1987-88ஆம் ஆண்டு கணக்குகளுக்குண்டான குறிப்பு

அட்டவணை 'ஈ'

1 (அ) முந்தைய ஆண்டிற்கான புள்ளி விவரங்கள் அவசியமான இடங்களிலெல்லாம் மறுவகைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) தொகைகள் முழுத் தொகையாக ரூபாயில் காட்டப்பட்டுள்ளன.

2. பின்னர் வரக்கூடிய பொறுப்புகள் :

(அ) இந்நிறுவனம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் செய்யப்பட்டுள்ள மேல் முறையீடு காரணமாக 1978-79 (ரூ. 2,26,591) மற்றும் 1979-80 ஆம் (ரூ. 27,748) ஆண்டிற்கு பின்னர் செலுத்த வேண்டிய வருமான வரி பொறுப்புகளுக்கு வகை செய்யப்படவில்லை.

(ஆ) அரசின் அனுமதினயப் பெற வேண்டியிருப்பதால் இந் நிறுவனம் 1985-86, 1986-87 மற்றும் 1987-88 ஆகிய மூன்று ஆண்டுகளுக்காக போனஸ் சட்டம் 1965ன் படி குறைந்த பட்ச போனஸ் என்ற வகையில் பணியாளர்களுக்கான போனசு தொகை ரூ. 21,288.90க்கு வகை செய்யப்படவில்லை.

3. வட்டி மற்றும் அபராத வட்டி வகையிலான வருமானம் ரொக்க அடிப்படையிலேயே கணக்கிடப்படுகிறது. (அதாவது பெறப்பட்டவுடன்) வட்டி மற்றும் அபராத வட்டியை செலுத்த வேண்டிய முறையில் கணக்கிடப்பட்டால் மேற்கூறிய தலைப்பில் அதிகரிக்கப் படும் தொகை ரூ. 7,16,418 (சிவில் வழக்கு தொடரப்பட்ட 29 நபர்களுக்குண்டான ரூ. 5,78,305/- உட்பட) மற்றும் 31-3-88 நாள்படி வரவேண்டிய ஆனால் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாத மொத்த வட்டி ரூ. 68,13,869 (சிவில் வழக்கு தொடரப்பட்ட 29 நபர்களுக்குண்டான ரூ. 58,65,039 உட்பட).

4. அரசு எண். 11 நிதித் (படிகள்-II) துறை நாள் 7-1-88ன் படி அலுவலர்களுக்குக் கொடுக்கப்பட்ட கொடைப்பணம் ரூ. 3150/- சம்பளம் மற்றும் படிகளில் சேர்ந்திருக் கிறது.

	1986-87	1987-88
5. அ. நிதியாண்டு முழுவதும் பணியாற்றி அவ்வாண்டில் 36000 ரூபாய்க்கு குறைவில்லாமல் ஊதியம் பெற்ற நபர்கள்	1	1
ஆ. மேற்கூறிய பணியாளருக்கு செலவினம் :		
I) சம்பளம் மற்றும் படிகள்	43,668	48,846
II) வருங்கால வைப்பு நிதிக்கும் தொழிலாளர் வைப்பீடு காப்புறுதித் திட்டத்திற்கும் அளித்த தொகை	2,500	3,242
III) ஏனைய நலப்பணிச் செலவுகள்	2,632	1,874
	48,800	53,962

(இ) நிதியாண்டின் ஒரு பகுதியில் பணியாற்றி மொத்தம் திங்கள் ஒன்றுக்கு 3000/- ரூபாய்க்கு குறையாத விகிதத்தில் அவ்வாண்டின் யாதொரு பகுதியிலும் ஊதியம் பெற்றவர். — இல்லை

6. தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனக் கட்டிடத்தில் ஒரு பகுதியில் இயங்கி வரும் திரையரங்குக் கழகத்திற்கு மாத வாடகை இன்னமும் நிர்ணயம் செய்யப்படாததால் மாதவாடகை ரூ. 500 என மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

7. கடனாளிகளிடம் நிலுவையாயுள்ள தொகைகளுக்கு உறுதிச்சான்று பெறப்படவில்லை.

8. 1987-88 ஆம் ஆண்டிற்கு வருமானவரி மதிப்பீடு நிலுவையாயுள்ளது.

9. பணிக்கொடைக்கான தொகையே தேவைக்கேற்ப கொடுக்கலாம் என்ற வகையில் அவற்றிற்கு எவ்வித ஒதுக்கீடும் செய்யவில்லை.

10. அந்நிய நாணயத்தில் செலவு — ஏதுமில்லை

11. அந்நிய நாணயத்தில் வரவு — ஏதுமில்லை.

சென்னை-600 113
நாள்: 14-9-1988

சி. என். கிருஷ்ணபாரதி
நிர்வாக இயக்குநர்

சி. எ. இராம்தாஸ்
தலைவர்

எஸ். அருள்சாமி
வி. சோமநாதன்
இயக்குநர்கள்

ஷெ நாளிட்ட எமது அறிக்கையுடன் படிக்கவும்
ஆர். இரகுநந்தன் அண்டு கோவிற்காக
பட்டயக் கணக்காளர்கள்
ஆர். இரகுநந்தன்
பட்டயக்கணக்கர்

தமிழ்நாடு திரையரங்குக் கழகம்

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் கருத்துக்கள்

31-3-1988 ஆம் நாளுடன் முடிவடையும் ஆண்டிற்கான சென்னை தமிழ்நாடு திரையரங்குக் கழகத்தின் (பொறுப்பு வரையறுக்கப்பட்டது) கணக்குகள் குறித்து இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் 1956-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் 619(4)ஆம் பிரிவின்கீழ் அளிக்கும் கருத்துக்கள்.

கணக்குகளுக்குண்டான குறிப்பு - குறிப்பு எண். 3 (அட்டவணை 'ஈ')

வழங்கப்பட்ட கடன்களுக்குண்டான வட்டி மற்றும் அபராத வட்டியை வணிக முறைக்குப் பதிலாக ரொக்க முறையைப் பயன்படுத்தியதால் நடப்பாண்டில் கணக்கில் சேர்ந்துள்ள வட்டியான ரூ.7,16,418ஐ வரவாக ஒரு பக்கம் எடுத்துக்கொள்ளாததோடு மறுபக்கத்தில் முந்தைய ஆண்டுகளுக்குண்டான வட்டியான ரூ. 2,30,327ஐ வரவாக கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இடம் : சென்னை
நாள் : 24-11-1988

டி. சேதுமாதவன்
மாநிலக் கணக்காய்வுத் தலைவர்

தமிழ்நாடு திரையரங்குக் கழகம்

நிறுவனச் சட்டம் 1956 பிரிவு 217ன்படி இயக்குனர்குழு அறிக்கையின் சேர்க்கை

31-3-88ஆம் நாளுடன் முடிவடையும் ஆண்டிற்கான தமிழ்நாடு திரையரங்குக் கழகத்தின் கணக்குகள் குறித்து இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் 1956 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் 619 (4)ஆம் பிரிவின் கீழ் அளிக்கும் கருத்துக்களுக்கு இயக்குநர்கள் குழுவின் பதில்.

கணக்குகளுக்குண்டான குறிப்பு - குறிப்பு எண். 3 (அட்டவனை 'ஈ')

நிறுவனச்சட்டம் 1956, பிரிவு 209 மற்றும் 211-ன்படி ஒவ்வொரு கம்பெனியும் மொத்தத் தொகை வரப்பெற்றது மற்றும் செலவு செய்தது குறித்து ஒழுங்கான கணக்குகள் தொடர்பான சரியான பேரேடுகளை வைத்துக்கொண்டிருத்தல் வேண்டும். அப்பேரேடுகள் கம்பெனியின் குறிப்பேடுகளைப் பற்றிய உண்மையான மற்றும் நம்பத் தக்கத் தகவல்களைத் தரும்படி இருத்தல் வேண்டும். கணக்குகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளும் வகையில் வைத்திருக்கும் வழி வணிக முறை, ரொக்கமுறை அல்லது இரண்டும் சேர்ந்த கலப்பு முறையாக இருக்கலாம். எனவே வட்டி வகையிலான வருமானம் ரொக்க அடிப்படையிலேயே கணக்கிடப்பட்டுள்ளது என்பதை கணக்குக் களுக்கான குறிப்பில் கூறியுள்ளதால் இக்குறிப்பு மேற்சொன்ன பிரிவின் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளது. எங்களது கருத்துப்படி மேற்கூறிய சட்டத்தின் பிரிவுகளில் வணிகமுறையிலேயே கணக்குகளைக் கட்டாயமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று யாதொரு இடத்திலும் கூறியதாகத் தெரியவில்லை. இருந்தபோதிலும் 1988ஆம் ஆண்டு நிறுவன (மாற்றங்கள்) சட்டத்தில் 1988-89ஆம் ஆண்டிலிருந்துதான் கணக்குகள் தொடர்பான பேரேடுகளை வணிகமுறையிலேயே வைத்துக் கொண்டிருத்தல் வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகையினால் 1987-88 ஆம் ஆண்டு வரைக்கும் வட்டி வரவிற்கான கணக்குகளை ரொக்க அடிப்படையில் வைத்திருப்பது சட்டத்திற்குப் புறம்பானது என்று கருத முடியாது. மேலும் இந் நிறுவனம் நிறுவனச் சட்டம் 1956 பிரிவு 209 (1)ன் படி ஒழுங்கான கணக்குகள் தொடர்பான சரியான பேரேடுகளை வைத்துக் கொண்டிருக்கிறது. ஆகையினால் ஐந்தொகைக் கணக்கு மற்றும் ஆதாய இழப்புக் கணக்குகள் இக்கம்பெனி பற்றிய உண்மையான மற்றும் நம்பத் தகுந்த தகவல்களைத் தருகிறது என்று கருதுகிறோம். மேலும் 1984-85 ஆம் ஆண்டு கணக்குகள் குறித்து அளித்த இதைப்போன்ற கருத்துக் களுக்கு நிறுவனச் சட்டம் 1956 பிரிவு 217ன் படி இயக்குநர்கள் குழு அளித்த பதில் 8-10-85 அன்று நடைபெற்ற ஆண்டுப்பொதுக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இயக்குநர்கள் குழுவிற்காகவும்
அவர்கள் சார்பாகவும்
சி. என். இராம்தாஸ்
தலைவர்

TAMIL NADU THEATRE CORPORATION LIMITED

SIXTEENTH ANNUAL REPORT

1987-88

CONTENTS

	Page
General Information	2
Notice to Members	3
Annexure to Notice	5
Directors' Report	6
Auditors' Report	10
Annexure	11
Balance Sheet	12
Profit and Loss Account	14
Schedules forming part of the Balance Sheet	16
Comments of the Comptrolelr and Auditor General of India	
Highlights	21

TAMIL NADU THEATRE CORPORATION LIMITED

TARAMANI : : MADRAS-600 113

BOARD OF DIRECTORS :

Name	Position
Thiru A. P. Muthuswami, I.A.S. (Upto 24-2-88)	Chairman
Thiru C. N. Ramdas, I.A.S. (with effect from 25-2-88)	Chairman
Thiru R. Karpoorasundarapandian, I.A.S. (Upto 1-3-88)	Managing Director
Thiru C. N. Krishna Bharathy, I.A.S. (With effect from 17-3-88)	Managing Director
Thiru Sukavaneshvar, I.A.S. (Upto 2-11-87)	Directors
Thiru K. Aludiapillai, I.A.S. (With effect from 3-11-87)	Directors
